### Editor's Note

Please address all communication for the English pages **to The English Editor,** 'Morning Star' UDUVIL, CHUNNAKAM


# THE MORNING STAR


*Registered as a Newspaper at the General Post Office, Sri Lanka under No. QB/59/300/26/82*

Established: 1841: A Christian Weekly : Published Every Friday

Vol. 142 JAFFNA, FRIDAY, 9th APRIL, 1982 **(Good Friday)** No. 15

RIGHTEOUSNESS EXALTETH A NATION BUT SIN IS A REPROACH TO ANY PEOPLE



### Subscription

Inland: Rs. 35/- per year.
Single issues are available at the VARANY MISSION SALES CENTRE, Model Market, Jaffna at Re. 1/- per copy.
*Apply to:*
**The Manager,**
'Morning Star', Vaddukoddai.


## New Electricity Rates

The following increased rates will operate for consumers from 1-6-82:

First fifty units — 40 cts. per unit.

51 — 150 units — 80 cts. per unit.

Above 150 units — 80 cts. plus 185 per cent fuel charge.

Above 1500 units — One rupee per unit plus 185 per cent fuel charge.

## Five thousand New Teachers from next Term

For the first time in recent years, 5000 teachers have been selected on the results of an Examination held for them. They have AL qualifications and will fill vacancies in subjects as Mathematics, English, Science and other subjects in which there is acute shortage in the country.

A one-week orientation course has been organised for them in the various Training Colleges. They will receive their appointments on a district basis on 21-4-82. In-service training will be given to them at regular intervals.

A large number of these new recruits are women.

## Further Relief for ME Job hunters

The fees now payable under the Consular Functions Act for the authentication and certification of documents has been waived by the Minister of Foreign Affairs with effect from 30-3-82.

This is intended as a measure of relief for those seeking employment abroad, particularly in the Middle East.

## World Hindu Congress Delegates to visit Jaffna

Delegates to the World Hindu Congress to be held at the BMICH from April 21 to 25 this year will be given a rousing reception in Jaffna when they visit the District at the conclusion of the Congress Sessions.

It is learnt that the Delegates who wish to visit Jaffna will arrive on the evening of 26-4-82. All arrangements have been made for their stay at the Jaffna University Campus.

They will be spending two days in Jaffna. They will visit the ancient shrines and also will be entertained during the two days of their stay at a Cultural Festival to be held at the Jaffna Open Air Theatre.

Some of them will address the Public Meeting to be held to welcome them. The Reception Committee in charge of arrangements is headed by Mr. S. Nadarajah Chairman of the Jaffna Development Council.

## Electoral Districts

Under the proportional representation system, nomination papers will be submitted in respect of each *electoral District* and not in respect of each *eletorate.* The number of members which each Electoral District is entitled to return totals 196 altogether. But the number of candidates required to be set out in each nomination paper totals 270 for all districts.

| Electoral District | Number of Members | Number of Candidates |
|---|---|---|
| 1. Colombo | 21 | 28 |
| 2. Gampaha | 17 | 23 |
| 3. Kalutura | 11 | 15 |
| 4. Kandy | 12 | 16 |
| 5. Matale | 5 | 7 |
| 6. Nuwara 'liya | 6 | 8 |
| 7. Galle | 11 | 15 |
| 8. Matara | 9 | 12 |
| 9. Hambantota | 7 | 10 |
| 10. Jaffna | 11 | 15 |
| 11. Wanni | 5 | 7 |
| 12. Batticaloa | 4 | 6 |
| 13. Digamadulla | 6 | 8 |
| 14. Trincomalee | 4 | 6 |
| 15 Kurunegala | 16 | 22 |
| 16. Puttalam | 7 | 10 |
| 17. Anuradhapura | 7 | 10 |
| 18. Polannaruwa | 4 | 6 |
| 19. Badulla | 8 | 11 |
| 20. Moneragalle | 5 | 7 |
| 21. Ratnapura | 10 | 14 |
| 22. Kegalle | 10 | 15 |
| | 196 | 270 |

## Our Per Capita Income

Sri Lanka has an annual per capita income of about 230 US dollars (around Rs. 4200) according to a special study prepared for the 38th session of ESCAP, the United Nations Economic and Social Commission for Asia and the Pacific.

The Study also notes that calorie intake in Sri Lanka shows a four per cent short fall as against the minimum required international calorie standard.

There is much room for better distribution of staple foodstuffs and for nutritional improvements, the study observes.

*(Foreward 1-4-82)*

---

*Obituary*

*Mr. Thuraiappah David Thisainayagam* a senior member of Atchuvely Church died of a heart-attack on 27th March 1982. He was 64. He was a school teacher for over 40 years was a member of Thampalai Thuraippah family of seven children and the head of a family of six daughters. His wife pre-deceased him several years ago at child-birth. The funeral service on the 29th was conducted by the bishop the Rt. Rev. D. J. Ambalavanar assisted among others by his sons-in-law the Revs A. C. Mathanaraj and M. Rajakulendran. The bishop preached the sermon and the Rev. E. D. Rasaratnam paid a tribute to the deceased.

*News from India*

**The Population of India**

The population, according to recent calculations stands at 670 million. There are about twenty five million more women than men. Some 290 million live below the poverty line.

**CMC's Rural Health Centre — Silver Jubilee**

*The Silver Jubilee* of the Rural Health Centre of Vellore Christian Medical College was celebrated recently. The RHC was started in 1956 with help from the Rockfeller and Nuffield Foundations, near Bagayam village in a corner of the College Campus but with in the area of the Kaniyambadi. Panchayat Union consisting of 30 villages and 34 hamlets and a population at that time of 50,000 people.

It is a base hospital designed as a throughly rural unit. Medical graduates began to be interned at the RHC through which a number of studies also were initiated in the villages and fruitful research was done.

The uniqueness of the RHC at Bagayam is not the simply designed hospital but the nature of the whole health care service built around it and reaching out to some 40,000 people in the Kaniyambadi Block.

A great need in Third World Countries has been the orientation that has to be given to the medical students to the needs of the masses and providing them with opportunities to practise primary health care in rural conditions without the aid of sophisticated diagnostic equipment.

The Rural Health Centre of the Christian Medical College, Vellore fulfils this great need.

---

*Personal*

*Mr. T. Ethirveerasingam* formerly Manager of the Life Stock Farm, Dept. of Agriculture, Anuradhapura was inducted as the new Director of the Paranthan Youth Training Centre on 29th March 1982. The Rev. S. Jeyanesan conducted the service of Indiction and preaceed the sermon.

*Mr. S. A. Cherubim* the former Director of YTC and who has become the Deputy General Secretary of the National Council of YMCAs of Sri Lanka was accorded a farewell at the Garden Party which followed the service of indiction.

*Mr. Devathasan Rajanayagam* a Committee member of the Colombo CSI Church has been appointed as a Justice of the Peace. He is the Chief Medical Laboratory Technologist at the General Hospital, Colombo.

## Chelvanayakam Commemorative Meeting

TULF Parliamentarians, the Chairman and, members of the Jaffna Development Council, the Jaffna Municipal Councillors and a large number of the Jaffna public participated in a Commemorative meeting held at the site of the Chelvanayakam memorial — an 80 feet dead straingts granite pillar towering in the heart of the town — on Wednesday March 30th.

Mr. K. Nesiah presided at this meeting which marked the 84th anniversary of the Birth of the Tamil leader. The occasion also marked the first death anniversary of Mr. S. Kathiravetpillai, former TULF, M. P., for Kopay.

Speaking on the occasion, Mr. A. Amirthalingam, the Leader of the Opposition and Member for Kankesanthurai said that Mr. Chelvanayakam was never tired of "negotiations" since the famous "pact" he made with Mr. S. W. R. D. Bandaranayake.

Even after the Tamil *Eelam* resolution adopted at the Vaddukoddai Conference, Mr. Chelvanayakam was engaged in a dialogue with *Sinhala leaders* in an effort to reach an understanding.

Even one month before he died he had a talk with Mrs. Bandaranayake, then Prime Minister at the conclusion of which he had promised "to come again" though that was not to be.

April 26th will be the fifth Death Anniversary of the great Tamil Leader who died on 26-4-77.

## Jaffna Public Library Fund

Rupees ten lakhs and two thousand have already been collected for the Jaffna Public Library Building Fund.

Rs. 209350 was collected by sale of flags in one day during Library Week held in Jaffna recently.

Mr. Raja Viswanathan Mayor of Jaffna will launch Library week in Colombo soon.

---

**News Gleanings**

O *The Jaffna Medical Association* will hold a Medical Exhibition at St. Patrick's College, Jaffna from April 21 — 25. Poster, Slogan and Essay competitions have been organised for school students.

O *The Jaffna Public Library* has received a sum of Ten Lakhs from the President's Fund as compensation for the loss it sustained on 1-6-81 at the hands of vandals.

# உதயதாரகை

**UTHAYATHARAKAI**

Estd. 1841.

கிறிஸ்தவ வார இதழ்.] [ வெள்ளிதோறும் வெளிவருவது.

"நீதி ஜனத்தை உயர்த்தும்; பாவம் எந்தக் கூட்டத்துக்கும் இழிவாம்"

மலர் 142 ] 9 — 4 — 1982 [ இதழ் 15

## கடவுளின் கண்ணீர்

சுமார் இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன் தமது கடைசிப் பயணமாகப் புனித எருசலேமை நோக்கி நமது ஆண்டவர் பவனியுடை சூழச் சென்று கொண்டிருந்தபோது, அடக்கொணாத் துயரத்தால் அதற்காகக் கண்ணீர் விட்டழுதார் எனக் காண்கிறோம். இந்தக் கடைசித் தருணத்திலாகிலும் உன் சமாதானத்திற் கடுத்த காரியங்களைக் குறித்துச் சிந்திக்கமாட்டாயோ என அதோடு வாதாடுகிறார்.

எருசலேமில் அவர் கண்டகுறை என்ன? அது பரிசுத்த நகரம்; கடவுளின் வாசத்தலம்; தொழுகிறவர்கள் செவ்வையாய்த் தொழுது கொள்ளத் தகுந்த தேவாலயம் அங்கேதானே இருந்தது. அதற்காகத் தானே இந்த வேளையிலும் கூட இருபது லட்சம் மக்கள் பல பாகங்களிலுமிருந்து அங்கு குழுமியிருந்தனர்.

அது தீர்க்கர் தோன்றிய இடமுமன்றோ? காலங்களுக்கூடாய்க் கர்த்தரின் செய்திகளை எடுத்துரைத்த இறைமக்கள் வாழ்ந்ததும் மாண்டதும் அங்கேயன்றோ?

அது அழகிய நகரமும் கூட. அதன் ஆலயத்தில் ஒரு பகுதியைக் கட்டவே நாற்பத்தாறுக்கும் மேலான ஆண்டுகள் பிடித்தன. ஒலிவமரக் குன்றினின்று பார்த்த எவரும் அதன் அழகினுற் கவரப் படாமற் போனதில்லை.

எருசலேம் ஒரு அரணுள்ள நகர். சுற்றுமதில் போட்டுப் பவுத்திரப் படுத்தப் பட்டது. காவற் கோபுரங்கள் கண்ணிமை வெட்டாது காப்பது போற் காட்சி தந்தன. அது ஒரு அரசனுக்கேற்ற நகரெனில் அக் கூற்று மிகையாகாது.

எனினும் இந்தக் கையிருப்புகள் தான் அதன் பேரிழப்புக்குக் காரணமானவை. அழகும் அரணும் லோகார்த்த ஆபாசம்; அன்புக்கும் அறத்துக்கும் பிரதிப் பொருளல்ல. ஆலயம் இருந்தது தான்; அதுவுமோர் ஆசாரக் கோவிலாய் மாறியதால் ஆவியோடும் உண்மையோடும் வழிபடுவோர் அரிதாய்ப் போய்விட்டனர். அரசனுக்குரிய நகரெனினும் ஆட்கொள்ள வந்த தன் அரசனை அது ஏற்றுக்கொள்ள மறுத்தது; அவரை அடையாளங் கண்டு கொள்ளாமற் போனது.

ஆதலாற்றான் அரசியல் ரீதியான சிந்தை கொண்டு புறநாட்டின் ஆதிக்கத்தை முறியடிக்கும் எண்ணமே தலையாய் நிற்க அதற்கென உதவும் ஓர் அரசனை— ஒரு மீட்பனை, மேசியாவை— தேடிய வண்ணமிருந்தது எருசலேம்.

கர்த்தரின் சிந்தை வேறென்பதை அது கருத்திற்கொள்ளவில்லை. அதை எடுத்துக்காட்ட முயன்ற அனைவரும் பறுமோசக்காரர் எனப் பெயரிடப்பட்டனர்.

இயேசு விட்ட கண்ணீரை ஒரு வேத பண்டிதர் விவரிக்கிறார்; தமது சித்தத்திற்கு மாறாகப் புத்தியற்ற புரட்சி செய்வதினால் தமக்குத் தாமே மனிதர் கொண்டுவரும் வேதனையையும் பாடுகளையும் காணும்போது கடவுள் விடும் கண்ணீரே அன்று இயேசு விட்ட கண்ணீர். "The tears of Jesus are the tears of God when He sees the needless pain and suffering in which men involve themselves through their foolish rebellion against His will"— Barclay.

இந்தக் கண்ணீர் அன்றொரு நாள் இயேசு விட்ட கண்ணீர் அல்ல; எருசலேமைப் பார்த்து அவர் விட்ட கண்ணீரும் அல்ல. எங்கேயாகிலும், எப்போதாகிலும், குலப்பெருமை, பணப்பெருமை கொண்ட எந்த ஒரு சாதியும் சனமும், படைப்பெலம் கொண்ட எந்த நாடும் தம் மத்தியில் வாழ் மக்களையோ, அயல் நாட்டுச் சனங்களையோ அடக்கியொடுக்கும் போதெல்லாம், பிறர் கண்ணீருக்கும் கம்பலைக்கும் காலான செயல்களைச் செய்யும் போதெல்லாம் இக்கண்ணீர் சொரியப்படுகிறதெனலாம். இது அவைக்கெல்லாம் நியாயத் தீர்ப்பாகும் என்பதற்குச் சரித்திரமே சாட்சி.

நீதி நியாயம் நடுநிலைமை எங்கே தழைக்கிறதோ, சமாதானத்திற்கும் தர்மநிலைக்கும் எங்கே வழிகோலப்படுகிறதோ அங்கேயே வாழ்வைக் காணலாம் என்பது உலகனைத்தும் கற்கவேண்டிய பாடமாகும்.

லோகார்த்த ஆபாசங்கள் நிலைப்பவையல்ல. சாதிகளையும் சனங்களையும் ஏதோவொரு கட்டத்தில் சந்திக்கவும் அவைகளின் செயல்களுக்குப் பிரதிபலன் அளிக்கவும் ஒருவர் உண்டென்பதை உலகம் அறியவேண்டும்.

---

## தூக்குக் கயிற்றின் நிழலில் ஒரு கடிதம்

[பங்களாதேஷ்: முடியாத புரட்சியின் ஒரு தொடர்கதை. 1971ல் ஜனித்த பங்களாதேஷ் நான்கு ஆண்டுகளில் புரட்சிகர ராணுவப் போராட்டத்தை முகங்கொடுக்க நேர்ந்தது. 1975 நவம்பர் ஏழாம் திகதி நடைபெற்ற இந்த எழுச்சி பங்களாதேஷின் அரசியல் அத்திவாரத்தையே உலுக்கியது. இந்த இராணுவப் புரட்சியின் முன்னணி வீரர் தான் 'அபு தாஹிர்', ஜனநாயகத்திற்கு விரோதமாக நடந்த விசாரணையில் தூக்கிலிடப்படுவதற்கு மூன்று நாட்களுக்கு முன்பு தன் குடும்பத்திற்கு அவர் எழுதிய இறுதிக் கடிதம் அவரது தளராத மன உறுதியை — தியாகத்தைப் பறைசாற்றுகிறது.]

தாஹிர் எழுதிய கடிதத்தின் சுருங்கிய வடிவம் இது:

டாக்கா மத்திய சிறைச்சாலை,
ஜூலை 18, 1976

மதிப்புக்குரிய அப்பாவுக்கும்,
அம்மாவுக்கும்,
பேரன்புக்குரிய லுத்பா
(மனைவி) வுக்கும்,
என் அன்புச் சகோதரர்களுக்கும்,
சகோதரிகளுக்கும்,

நேற்று பிற்பகல் இராணுவ நீதிமன்றம் எங்களுக்கு எதிரான தனது தீர்ப்பினை வழங்கியது. எனக்கு மரண தண்டனை வழங்கப்பட்டிருக்கிறது...... தீர்ப்பு வழங்கியவுடன் பயந்தோடும் நாய்களைப்போல அந்த இடத்தை விட்டு அவர்கள் அவசரமாக வெளியேறினார்கள்.

விதத்லைபான பத்திரிகையாளர் மஹ்மூத் திடீரென்று அழ ஆரம்பித்து விட்டார். நான் அவருக்கு ஆறுதல் சொல்ல முயன்றேன். "இப்படி ஒரு தண்டனையை விதிக்கும் ஆணவம் ஒரு வங்காளிக்கு இருப்பதைக் கண்டு தான் நான் அழுகிறேன்" என்று தேம்பியவாறு மஹ்மூது பதில் சொன்னார்.

சாலிஹா (ஐந்து ஆண்டு கடூழியச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்ட பெண்மணி) அங்கிருந்து ஓய்வறைக்குள் சென்று அழ ஆரம்பித்தாள். "உன்னிடம் இப்படி ஒரு பலவீனத்தை எதிர்பார்க்கவில்லை" என்றேன். "இவை கண்ணீரல்ல... சிரிப்பு" என்றாள் சாலிஹா. என் சகோதரியின் கண்ணீர்த்துளிகள்! எவ்வளவு அற்புதமான சிரிப்புத்தரிசனம்! அவளை முதன் முறையாக இந்தச் சிறை வாசலிலே தான் சந்தித்தேன். அவள் மீது எனக்கு அத்தனை மரியாதை! அவளைப் போன்ற ஒரு சகோதரியை எந்தத் தேசத்தால் பெற்றெடுக்க முடியும்!

தண்டனை விதிக்கப்பட்டவர்கள் அனைவரும் ஒன்றுக்காகத்தான் வருந்தினார்கள்; "ஏன் எங்கள் எல்லாருக்கும் மரண தண்டனை விதிக்கவில்லை?" திடீரென்று சிறைச்சாலையின் எல்லாப் பகுதியிலும் இருந்தும் முழக்கம் கேட்டது. துணிவுடனும் உரத்த குரலுடனும் முழங்கினார்கள், "தாஹிர் பாய்! சிவப்பு வணக்கம்! லால் சலாம்!" இவ்வுயர்ந்த கவர்களால் இந்த முழக்கத்தைத் திருப்பிப் பெற முடியுமா? இந்த அறைகூவலின் எதிரொலிகள் என் தேசமக்களின் இதயங்களைத் தொட்டுவிடாமல் போய் விடுமா?

இத்தீர்ப்பு அறிவிக்கப்பட்டதும் எங்கள் வழக்கறிஞர்கள் திகைத்துப் பேசாதிருந்தனர்கள். இத்தீர்ப்புக்கு அப்பீல் இல்லாத போதும், தலைமை நீதி மன்றத்திற்கு ரிட் தாக்கல் செய்வதாகக் கூறினார்கள். இராணுவ விசாரணையின் அனைத்துச் செயல்களும் விசாரணை நடத்திய விதமும் சட்ட விரோதமானவை. அதே சமயத்தில் ஜனாதிபதிக்கு விண்ணப்பிக்கப் போவதாகவும் அவர்கள் கூறினார்கள். அப்படிப்பட்ட வேண்டுகோள் எதையும் விடுக்கக் கூடாது என்று என் நிலையை நான் தெளிவுபடுத்தினேன். இந்த ஜனாதிபதியைப் பதவியில் ஏற்றியவர்களே நாங்கள் தான்; இந்தத் துரோகிகளிடம் உயிர்ப்பிச்சை கேட்டு நான் விண்ணப்பிக்கப் போவதில்லை.

... ஒவ்வொருவராகப் பிரிவு வணக்கம் சொல்லிவிட்டுப் பிரிந்து செல்கிறார்கள். அவர்கள் கண்கள் கசிகின்றன...

அவர்கள் போய் விட்டார்கள். எல்லாரும் தான்.

நான் 8-ம் இலக்க அறைக்குக் கொண்டு செல்லப்படுகிறேன். இது தூக்கிலிடப்படுகிற கைதிகளுக்காக ஒதுக்கப்பட்ட அறை. எனக்கு அடுத்த அறைகளில் தூக்குக் கயிற்றுக்குப் பலியாக மூன்று பேர் தயாராகி இருக்கிறார்கள். இந்தச் சின்ன அறை நல்ல சுத்தமாக இருக்கிறது பரவாயில்லை.

மரணத்தை நேருக்கு நேராகச் சந்திக்கும் இந்த நிலையில் என்னுடைய வாழ்க்கையைப் பின்னோக்கிப் பார்க்கிறேன். அதில் வெட்கப்படுவதற்கு ஒன்றுமில்லை என்று உணர்கிறேன். என்னை நமது மக்களுடன் பிரிக்க முடியாதபடி ஒன்றிணைத்த பல சம்பவங்களைப் பார்க்கிறேன். இதைவிடப் பெரிய மகிழ்ச்சியும் சந்தோஷமும் வேறு எதுவாக இருக்க முடியும்?

நீட்டு, ஜிஹா, மிஷு... அனைவரும் என்னுடைய நினைவில் நிறைகிறார்கள். எனக்குப் பின்னால் அவர்களுக்காக எந்தச் செல்வத்தையும் சொத்தையும் நான் விட்டுச் செல்லவில்லை. ஆனால், நம்முடைய தேசம் பூராவுமே அவர்களுடைய எதிர்காலத்திற்குத்தானே! அன்பையும் பாசத்தையும் இழந்த, உடுத்துவதற்கு ஒரு முழம் துணியும் இல்லாத ஆயிரக்கணக்கான குழந்தைகளை நாம் சந்தித்திருக்கிறோம். அவர்கள் வாழ்வதற்கு ஒரு வீடு தேவை என்று அவாவினோம். வங்காள மக்களுக்கு இந்த விடியல் வெகு தொலைவில் இருக்கிறதா? இல்லை... இது வெகு தொலைவில் இல்லை. சூரியன் உதிக்கும் நேரம் இது.

இந்த தேசத்தை சிருஷ்டிப்பதற்காக என் ரத்தத்தைக் கொடுத்திருக்கிறேன். இப்பொழுது என் உயிரையும் கொடுப்பேன். இது நம் மக்களின் ஆன்மாவின் மீது சுடர் வீசட்டும். அவர்களுக்கு ஒரு புதிய சக்தியை வழங்கட்டும். எனக்கு இதை விடப் பெரிய பரிசு வேறென்ன இருக்க முடியும்!

என்னை யாராலும் சாகடிக்க முடியாது. நான் மக்கள் மத்தியில் வாழ்கிறேன். அவர்களுடைய நாடித்துடிப்பிலே என்னுடைய உயிரும் துடிக்கிறது. என்னைக் கொல்வதென்றால் மக்கள் அனைவருமே கொல்லப்பட வேண்டும். யாருக்கு இந்த வல்லமை உண்டு? ஒருவருக்குமே இல்லை.

எனது மகோன்னதமான மரியாதையும் என் அன்பும் எனது நிரந்தரமான பாசமும் உங்கள் அனைவருக்கும் உரியதாகட்டும்.

தாஹிர்.

ஆதாரம்: BANGLADESH: THE UNFINISHED REVOLUTION by Lawrence Lifschulte.

---

## வழி, வாய்மை, வாழ்வு

கனவு கலைந்தது கண்கள் விழித்தன
மனது நிறைந்த மன்னனை நினைந்தேன்
இருள் அகன்றது இரவி எழுந்தனன்
மருள் கலைந்தது மனமும் விழித்தது.

மனித குலம்மற ஜனனம் எடுக்க
மனித குமாரன் சிலுவையில் மரித்தனன்
தனி ஒருவனுல் தாரணி அழைத்தது
இனி எதற்கு எவருஞ் சிடுவதோ.

அன்னல் யேசு அவனியில் தோன்றி
என்னைற் கரிய இரக்க உணர்வுடன்
மண்ணில் பிறந்த மாந்தர் தமக்கு
விண்ணக மேகும் வழியை வகுத்தனன்

வழியும் நானே வாய்மையும் நானே
பழிபட ஏது வாழ்வும் நானே
துவியும் மாந்தர் துயர்ப்பட வேண்டா
களிப்புடன் என்கரம் கைப்பற் றிடுவீர்.

— த இன்பராஜன்.

## சபையின் தூண்கள்

சுவிசேடத்தின் சத்தியம் உங்களிடம் நிலைத்திருப்பதாக!

K. ஃப்ரெடரிக் சாமுவேல் — பாண்டிச்சேரி

(முற்றொடர்ச்சி)

அன்று ஞாயிற்றுக்கிழமை. முதன்முதலாக போதகர் வேத மாணிக்கம் கடாட்சபுரத்துச் சபையை ஆலயத்தில் சந்திக்கிறார். 'ஆவியை மழைபோலே யூற்றும்' என்ற பாடலுடன் ஆராதனை ஆரம்பமாயிற்று. ஜெப வழிபாட்டிலேயே கண்ணும் கருத்துமாக இருந்த போதகர் பிரசங்கம் செய்வதற்காகப் பீடத்தின் மேல் ஏறியபோதுதான் ஆலயம் முழுவதையும் நன்றாகப் பார்த்தார். ஆங்காங்கே ஒரு சிலரே ஆலயத்திலுள் அமர்ந்திருந்தனர். ஆனால், ஆலயத்திற்கு வெளியே — வாசல்களிலெல்லாம் — வாலிபரும், மற்றோரும் திரளாக நின்று கொண்டிருந்ததைக் கண்ட போதகரின் மனம் வேதனையால் வருந்தியது. அவர் பிரசங்கத்தைத் தொடங்கினார் :

'சுவிசேடத்தின் சத்தியம் உங்களில் நிலைத்திருப்பதாக. இந்தச் சபை வேரற்றுப் போய்விடாமல் அதற்கு வலுவூட்ட வேண்டும் என்று பேராயர் எனக்குப் பணியிட்டபோது, விழுந்துவிடும்ளவிற்கு ஒரு சபை பலவீனப்படக் கூடுமோ என்று ஐயப்பட்டேன். ஆனால், இப்போது இந்தச் சபையை முதன் முதலாகப் பார்க்கும்போது அது உண்மைதான் என்று அறிவதற்காக ஆலயத்தின் தூண்கள் எல்லாம் வெளியே நிறுத்தப்பட்டிருப்பதைக் காண்கிறேன். ஆம், சபையின் தூண்கள் வெளியேற்றப்பட்டு விட்டன. அந்தத் தூண்கள் மீண்டும் உள்ளே பொருத்தப்படும்வரை இந்தச் சபை பலப்பட முடியாது என்று எண்ணுகிறேன். சுவிசேடத்தின் சத்தியம் இங்கே நிலைத்திருப்பதுடன் அதன் சுடர் சுற்றுப்புறமெல்லாம் ஒளி வீச அந்தத் தூண்கள் உள்ளே மீண்டும் நிறுத்தப்பட வேண்டியது மிகவும் அவசியம். ஏனெனில், நம்முடைய இருதயங்களை இருளாக்கிக்கொண்டு எப்படி மற்றவர்க்கு நாம் ஒளியாக இருக்க முடியும்? சமுதாய சீர்கேடுகளைச் சீர்ப்படுத்தும் சாரம் நம்முள் இல்லாமல் எவ்வாறு பூமிக்கு நாம் உப்பாக இருக்கமுடியும்? பகையினாலும், பொருளாசையினாலும், பகட்டாலும், பெருமையினாலும் தேவனுடைய அருளைப் பெறமுடியாமல் குருடராகிவிட்டு, எப்படி நாம் மற்றவருக்கு வழி காட்டமுடியும்? சமுதாய ஏற்றத்தாழ்வுகள் சபையினுள்ளும் இருப்பதால், பிறமதச் சாதிச் சண்டைகள் சபையிலும் கலந்து விட்டதால், அதிகார ஆணவமும், பகட்டும், மேட்டிமையும், பரிசுத்த ஸ்தலத்தினுள்ளும் அரசாட்சி செய்வதால் பரமனின் அருளையும் ஆசியையும் பெறக்கூடிய தாழ்மையும் தன்னலமற்ற தகுதியும் தழைக்காததால் தான், அந்தத் தூண்கள் வெளியேற்றப்பட்டுக் கிடக்கின்றன.

வெளியேற்றப்பட்ட தூண்களைப்பற்றி நாம் கவலையற்று இருப்போமானால், அவை அருகி சபைக்கும் உதவாமல், சமுதாயத்திற்கும் கேடு விளைவிக்கும் சத்துருவாக மாற நேரிடும். அதற்கு இந்தச் சபை பொறுப்பாகக்கூடாது என்ற கரிசனையினால் கூறுகிறேன். சுவிசேடத்தின் சத்தியத்தில் ஐக்கியப்படவேண்டிய நாம், சபையின் சச்சரவுகளால் சீரழிந்து போய் விடக்கூடாது. சிலுவையில் ஒன்று கூடவேண்டிய நாம், சபையில் சிதறிப்போகக்கூடாது. ஆண்டவர் உங்களை ஆசீர்வதிப்பாராக'

போதகரின் பிரசங்கம் உள்ளே உள்ளவர்களின் உள்ளத்தை மட்டுமல்ல, வெளியே நின்றிருந்த வாலிபர், மற்றும் அனைவரின் இதயத்திலும் கிரியை செய்துகொண்டிருந்தது.

போதகர், திருவிருந்திற்காக ஆசரிப்புகளைச் செய்து முடித்து அப்பத்தையும் திராட்சைரசத்தையும் ஆசீர்வதித்துவிட்டு சபையாருக்குக் கொடுக்கத் திரும்பிய போது, ஆலயம் நிறைந்திருந்தது. உள்ளே இருந்த ஆசனங்களை வெளியேற்றிவிட்டு, சபையினர் அனைவரும் முழங்காலில் நின்று பக்தி பரவசத்தோடு இருந்ததைக் கண்ட போதகரின் விழிகள் ஆனந்த நீரைச் சொரிந்தன. அவர் கையிலிருந்த அப்பம் புதிய ஒளியுடன் பிரகாசித்துக்கொண்டிருந்தது. சுவிசேடத்தின் சத்தியம் கடாட்சபுரத்தின் சபையில் நிலைக்கத் துவங்கியது!

---

## உயிர்த்தெழுந்த இயேசு

— T. S. P. —

கிறிஸ்தவ பண்டிகைகளில் நாம் அதிக விமரிசையாக கொண்டாடுவது கிறிஸ்மஸ் ஆகும். ஆனாலும் கிறிஸ்தவ விசுவாசத்திற்கு அடி அஸ்திபாரமாக விளங்கும் ஈஸ்டர் பண்டிகைக்கு கொடுக்க வேண்டிய முக்கியத்துவம் கொடுக்கப்படாமல் போவது வருத்தத்துக்கு உரியதே; இருப்பினும் நாம் விசுவாசிக்கும் ஆண்டவர் மரித்தோரின் தேவனாக இராமல் உயிருள்ளோரின் தேவனாக இருக்கிறார். (லூக்கா 20 : 38) என்பது நம் எல்லோருடைய விசுவாச அறிக்கை ஆகும்.

"எல்லாம் முடிந்தது" என்ற அக்கலாய்ப்போடு தம் குருவை இழந்து விட்டநிலையில் இனி என் செய்வோம் என்ற ஏக்கம் சந்தோஷத்தின் எல்லைக்கே மாறிவிட்ட சம்பவம் ஈஸ்டர் ஆகும். பரலோக இராச்சியத்தை இவ்வுலகில் ஏற்படுத்த வந்த ஆண்டவரின் ஜீவியமும், ஊழியமும், முடிந்து விட்டதோ என எண்ணியவர்களுக்கு, அதன் விரைவான பரம்புதலும் கிரியையும் செயற்படத் தொடங்கியது ஈஸ்டர் சம்பவத்தினாலேயே. அவரை பின்பற்றியவர்களுக்கு தென்புட வெற்றியும் மகிழ்ச்சியும் ஊட்டிய சம்பவம் ஈஸ்டர் ஆகும். இவ்வுலக கட்டுப்பாடுகளுக்கும் சிந்தனைகளுக்கும் அடங்கிய ஒரு சிவியத்தில் இருந்து மனிதசிந்தனைகளுக்கு அப்பால் மனிதனால் கிரகித்தும் கொள்ள முடியாத அளவுக்கு இறைவனின் பிரசன்னமும் செயல்களும் பரந்து வளர்ந்தது இச்சம்பவத்தின் பின்னரே.

உயிர்த்தெழுந்த இரட்சகரை நாம் எங்கே காணலாம்?

முதற்கண், அவரை பிதாவின் வலது பாரிசத்தில் மகிமை அடைந்து வீற்றிருக்கும் இரட்சகராக காண்கிறோம். அவர் பரமேறினபின் தமது சத்துருக்களை தமது பாதவழியாக்கி போடும் வரைக்கும், பிதாவின் சிங்காசனத்திலிருந்து அரசாளுகிறார். ஆகையால் அவர் பரத்தில் இருப்பதாக நாம் நினைப்பது தவறு அல்ல இன்னும் அவரை எங்கே காண்கிறோம்?

"உலகத்தின் முடிவு பரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனே கூட இருக்கிறேன்." என்று வாக்குப்பண்ணினவர், தமது பக்கத்தில் இருக்கிறார். இயேசு உயிர்த்தெழுந்த பின்பு தமது சீசர்களுடன் கூடவே இருந்தார். அவர்களோ அவரைக் காணவில்லை அவர் தம்மை பலவிதமாய் வெளிப்படுத்தின போது மாத்திரம் அவர்கள் அவரைக்கண்டார்கள். காணாத

(தொடரும்)

## சிலுவையின் தாற்பரியம்

— கலாநிதி வண. ஜேம்ஸ் மேதர் —

உலக சரித்திரத்தில், இயேசு கிறிஸ்துவின் சிலுவை மரணம் அதிக பரிதாபமும் பயங்கரமுமான ஒரு சம்பவம். ஏறக்குறைய 33 வயதாயிருக்கையில், எருசலேம் பட்டணத்துக்கு வெளியே கல்வாரி என்ற மலையில் அவர் சிலுவையில் அறையப்பட்டு கொல்லப்பட்டார் விசேஷமாக, மூன்று விஷயங்கள் அவருடைய மரணத்தை வெகு துக்கமான வர்த்தமானமாக்குகிறது :

(அ) கடவுளாயிருந்தும் மனிதருபமெடுத்து மனிதனுக்கு கடவுளின் அழவற்ற அன்பை வெளிப்படுத்தும்படியும், கடவுளுக்கு எதிராய்க் கலகம் செய்யும் மனிதனை இரட்சித்து, பிதாவின் ஐசுவரியங்களைச் சுதந்தரிக்கும்படி செய்யவும் இயேசு கிறிஸ்து வந்தும் அவரை ஜனங்கள் தள்ளிவிட்டார்கள் :-

(ஆ) இயேசு யாவருக்கும் நன்மை செய்தார். அரிய உபதேசங்கள் செய்தார். ஜாதிகளுக்கிடையிலிருந்த பிரிவினைகளை அகற்றி, யூதரையும் சமாரியரையும், மற்ற ஜாதிகளையும் ஐக்கியப்படுத்தி, உலகமெங்கும் 'மனித சகோதரத்துவம்' உண்டாக்க ஊழியஞ் செய்தார் ஆகிலும் நன்மை செய்த அவருக்குக் கொடிய தீமைகள் செய்யப்பட்டன.

(இ) பிலாத்து, விசாரணை செய்து, இவரில் நான் ஒரு குற்றமும் காணவில்லையென்று தீர்ப்பு செய்தான் பரி லூக்கா 23 : 14 பாருங்கள் ஆகிலும், இயேசு வெகு கொடூரமாய் நடத்தப்பட்டு, இரண்டு கொலைகாரக் கொள்ளையர்களோடு சிலுவையில் ஆணிகள் அறைந்து கொல்லப்பட்டார்.

இந்த பதங்கரமான நாடகத்தை விளங்குவது மனிதனுக்கு கஷ்டமான ஒரு விஷயம் இந்த துக்கமான வர்த்தமானத்தைச் சரியாய் விளங்குவதற்கு பின்வரும் குறிப்புக்களைக் கவனிப்பது உதவியாயிருக்கும் :-

(1) இச்சம்பவத்தை, பழைய ஏற்பாட்டில் இவருடைய வருகையைப் பற்றிச் சொல்லப்பட்டிருப்பவைகளாகும். இவருடைய உயிர்த்தெழுதலைப் பற்றிச் சொல்லப்பட்டவற்றோடும்! சேர்த்து, நாம் தியானிக்கவேண்டும் ஆதியாகமத்தில் மூன்று இடங்களில் சொல்லப்பட்டிருக்கும் தீர்க்கதரிசனங்களுடன் நாம் ஆரம்பிக்கலாம், 3 : 15; 12 : 9; 19 : 10, மேலும், இயேசுவின் சிலுவை மரணமும், மூன்றும்நாள் நடந்த உயிர்த்தெழுதலும், ஒன்று! ஒரு நாணயத்தின் இரண்டு பக்கங்களைப் போன்றவை.

(2) கிறிஸ்து மார்க்கத்தில் சிலுவை அதிக முக்கியமான இடத்தைப் பெறுகிறது.

உதாரணமாக நாலு சுவிசேஷங்களையும் பாருங்கள். அவை நாலு வித்தியாசமான ஆக்கியோன்களால் எழுதப்பட்டவை. நாலுபேரின் விஷயமும் ஒன்றே — இயேசு கிறிஸ்துவின் சீவியம். முதலாம் ஆக்கியோன் பரி மத்தேயு. அவர் தம்முடைய புத்தகத்தில், 30 பக்கங்களில் 10 பக்கங்களை அவருடைய சிலுவை மரணத்திற்கும், பரி. மாற்கு 10 பக்கங்களில் 7 பக்கங்களையும், பரி. லூக்கா தம்முடைய புத்தகத்தில் நாலில் ஒரு பங்கையும் (¼) பரியோவான் 24 பக்கங்களில் 10 பக்கங்களை கொடுத்தார்கள். அவருடைய ஊழியம், ஏறக்குறைய வருடங்களின் (180 வாரங்களின்) ஊழியம். ஆனால், கடைசி வாரத்தின் சம்பவத்திற்கு பெரிய இடம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

(3) சிலுவைப் பாடுகளை இயேசு எதிர்நோக்கிய விதமும், கிறிஸ்து மார்க்கத்தில் சிலுவைக்கிருக்கும் முக்கியமான இடத்தைக் காட்டுகின்றது; உதாரணமாக பரி மத்தேயு 16 : 21 - 23 பாருங்கள். பேதுரு இயேசுவைக் கடிந்து நீர் இப்படி மரிக்கக் கூடாதென்று சொன்னபொழுது, இயேசுவின் விடையில் ஒரு வார்த்தையைக் கவனியுங்கள் "வேண்டும்" (must): நான் எருசலேமுக்குப்போக வேண்டும்; நான் சிலுவையைச் சந்திக்க வேண்டும் எங்களுடைய மார்க்கத்தில், சிலுவை ஒன்று "வேண்டும்" (The Cross a Must.)

(4) உண்மையான அன்பின் தன்மையும், இலட்சணங்களும், சிலுவையில் வெளிப்படுத்தப்பட்டன.

உண்மையான அன்பு, ஒரு பெரிய ஆற்றைப் போன்றது. ஆனால் இந்த ஆறு, ஒரு திசையில் அல்ல, மூன்று வித்தியாசமான திசைகளில் ஓடுகிற ஆறு :-

(அ) மேலாக (Upward) கடவுளை நோக்கி கடவுளின் அன்பு "அவருடைய சித்தத்தைச் செய்வேன்" என்ற ஊக்கம் முதலிய தெய்வபக்தியை வெளிப்படுத்தப்படுகின்றது வானத்தை நோக்கி ஓடும் ஆறு!!

(ஆ) உள்ளே (Inward) மனிதனுக்குள் சுயநேசமற்ற அன்பாயும், கடவுளுடைய காரியங்களில் ஊக்கமாயும், கடவுளை எப்படியோ சேவிக்க வேண்டுமென்ற தாகமாயும் பெரிய விளைச்சல் உண்டாகும் ஆச்சரியமான ஆறு இது

(இ) வெளியே (Outward) மற்றவர்களின் அனுதாபமாயும், அவர்களின் முன்னேற்றத்திற்காக, சுயபலியுள்ள ஊழியமாயும் ஆற்றின் தண்ணீர் கனி கொடுக்கின்றது.

பரி. பிரான்சிஸ், குஷ்டரோகிகளுக்காகச் செய்த சீவியம் ஊழியம் இதற்கு ஒரு திருஷ்டாந்தம், திருச்சபைச் சரித்திரம் எங்கள் நாட்டிலும் பிற தேசங்களிலும் நூற்றுக்கணக்கான சம்பவங்களை திருஷ்டாந்தங்களால் நிறைந்திருக்கின்றது.

(5) சிலுவையின் அதிசயமான உபதேசம்:-

(அ) மரணத்தில் ஜீவன் (Life through death) பரி. யோவான் சுவிசேஷம் 12 : 24 பாருங்கள். கோதுமை மணியானது மண்ணில் மரித்து, அறுபது, கனிகள் கொடுக்கிறது பரி, மத்தேயு 19 : 21, 29 பாருங்கள்,

(ஆ) நஷ்டத்தில் ஆதாயம், (Gain in Loss) பரி. மாற்கு 3 ; 35, 9 ; 25 ; பிலிப்பியர் 3 : 8 பாருங்கள்.

(இ) தெய்வ அன்பின் அதிசயம், கடவுளுக்கெதிராய்க் கலகம் செய்வோருக்குப் பின்னாலும் தேடித்திரிகிற கடவுள் தண்டிக்கும்படி அல்ல கலகக்காரரையும் கடவுளின் ஐசுவரியங்களின் சுதந்தரவாளிகளாக்குவதே கடவுளின் நோக்கம். பரி லூக்காவின் சுவிசேஷம் 15 : 4, 22 பாருங்கள்.

(ஈ) கடவுளின் வெளிப்படுத்தல்களின் முறை பிரதானமாக உவமைகள் மூலம் இயேசு உபதேசித்தார். கடைசியில் சிலுவையின் மூலம் உபதேசித்தார் இருமுறைகளும், மனிதன் நன்மையடைய என்ன செய்து நிறைவேற்ற வேண்டுமென்று காட்டுகின்றன.

சிலுவைக்குமுன், மனிதன் தரித்து, ஜெபத்துடன் தியானித்து அவன் செய்யவேண்டிய பாகத்தைச் செய்யும் பொழுது இத்துக்கமான வர்த்தமானத்தின் ஆச்சரியமான மறுரூபப்படுத்தும் தன்மையையும், வல்லமையையும் அவன் காண்பான்,

மகாத்மா காந்தி அவர்களுக்கு அதிக பிரியமான கீதம் சிலுவையின் மேன்மையைக் காட்டுகிறது :

"என் அருள் நாதர் இயேசுவின்
சிலுவைக் காட்சி பார்க்கையில்
பூலோக மேன்மை நஷ்டமே
என்றுணர்ந்தேன் என்னுள்ளத்தில்."

*EDITORIAL*

## Easter Joy

"The disciples were glad when they saw the Lord", witnesses John (20:20) with reference to the first appearance of the risen Lord to his disciples. The words of the Psalmist, "This is the day which the Lord has made; let us rejoice and be glad in it" (118:24) came to have new meaning for them. They had witnessed an event of such revolutionary power and significance that even as pious Jews they found themselves giving greater importance to the first day of the week, the day on which the Lord was raised from the dead, than to the old Sabbath. Jesus himself during his ministry reminded the Jews "Your father Abraham rejoiced that he was to see my day; he saw it and was glad" (John 8:56). What Abraham saw in faith and in a proleptical manner the disciples now encountered as living experience and so "they were glad when they saw the Lord."

The joy of Easter is the joy of a living encounter with the living Lord. The one who was crucified in disgrace, dead and was buried now rose triumphant over death and once again "walked and talked" with the disciples. They once again "ate and drank with him after he rose from the dead" (Acts 10:41). It was the joy of being in the presence of God himself, the joy of a living fellowship with the living Lord. The disciples were glad when they saw the Lord because his appearance was proof to them that Christ was conqueror. He had overcome the powers of evil. The resurrection meant that the final and ultimate power, death itself, had been defeated. They stood beside the conqueror over all principalities and powers and so were glad. The appearance of the risen Christ was not just an exhibition of divine power over against the powers of this world but an event that brought about a revolutionary change in the lives of the disciples. The frightened group of men who fled from their master at the time of trial and temptation now were transformed into the bold and courageous witnesses of the risen Lord. The small Church of the Upper Room now became potentially the Church of the uttermost parts of the earth. The men who were afraid to face the rulers who crucified Jesus now began to breathe defiance in their witness, "God has made him both Lord and Christ, this Jesus whom you crucified" (Acts 2:36).

The disciples were glad when they saw the Lord because the Lord's resurrection meant for them a transformation of their own lives, a new beginning. As a later witness to the resurrection was able to affirm "as Christ was raised from the dead by the glory of the Father, we too might walk in newness of life", "For if we have been united with him in a death like his, we shall certainly be united with him in a resurrection like his" (Rom. 6:4-5). Sin had no power over them for in their unity with the risen Lord they found the power over them for in their unity with the risen Lord they found the power of sin broken. They experienced the power of a new life "If a man be in Christ there is a new creation. The old things are passed away, behold all things are become new." The joy of Easter is the joy of this new life lived in fellowship with the living Lord. G. K. Chesterton once described the differences between three great figures in English Literature by saying, Carlyle saw, Arnold knew, and Dickens tasted. Carlyle wrote what he saw, Arnold wrote what he knew, and Dickens described what he experienced. In the case of the disciples the resurrection was a case of seeing, knowing and experiencing all in one. It was because it was so complete and comprehensive an experience they lived and witnessed so triumphantly. They were now driven not by a vague faith but by a confident assurance. When the great scientist Michael Faraday lay dying someone asked him "What are your speculations?" Faraday replied "Speculations? I have none. I rest my soul on certainties." The manger in Bethlehem, the Cross on Calvary, the empty tomb in a garden were the bases of the certainties of the early Church, but above all it was the certainty of a living experience of the risen Lord. It is this certainty which can give us joy to this day.

"No fable old, nor mythic lore,
Nor dream of bards and seers,
No dead fact stranded on the shore
Of the oblivious years:
But warm, sweet, tender, even yet
A present help is He
And faith has still its Olivet
And love its Galilee."

## New Salary Scales for Doctors from 1-1-82

Medical Officer Grade I: Rs. 28,000 to 36,000 per annum. Grade II: 21,600 to 28,200 per annum. Full Specialists: 28,200 to 43,200 per annum. Part Specialists: 28,200 to 39,600 per annum. Deputy Administrators: 28,200 to 32,100 per annum. Dental Surgeon Specialists: 28,200 to 43,200 Grade I: 28,200 to 30,600 Grade II: 19,200 to 28,200.

Medical Officers and Dental Surgeons will also be paid a non pensionable allowance of Rs. 700 for Grade I Officers Rs. 500 for Grade II Officers and Rs. 300 for Grade III Officers.

The maximum renumeration that an Officer will be entitled should not exceed Rs. 5200 per month excluding the Special cost of living allowance.

## The Recurring Cross

by

*Rev J. J. Ratnarajah*

The Season of Lent, Good Friday and Easter normally comes many times in one's life. The more they come the closer they should draw us nearer to the Cross. But that does not happen always because to many of us these are just dates on the Church Calendar. We go through them with just the same amount, or even less, of the enthusiasm or excitement that we share in a Cricket match. To many it is merely an emotional feeling that leaves them in the end farther from Him who hung on the Cross. To those of us to whom it becomes an intellectual exercise the Cross simply remains as an object of foolishness, as it did to the Greeks of old. Even to those who are "religious" like the Priests and common folk of the Jewish fold of old the Cross becomes a scandal. But to those who wallow in material pleasures, not knowing the way out, yearning to be delivered, it becomes a mystery that can be revealed by the release to new life and power.

The Cross which Jesus carried along the way to Calvary and in which He was finally nailed to death is one that cannot be repeated. Historically what Jesus did on the Cross cannot recur because of the very nature of what He did there. During the Roman regime in Palestine there were hundreds of crosses on which thousands were crucified. But, in the case of the Cross of Jesus the One who died was God incarnate; One who became Man once and for all; One who died for all time for all men. We need not, and cannot, desire the possibility of another Incarnation because Jesus lives among us. He walks with us and talks with us. We need not look for another Calvary and another Easter. Never did the world of men of all the past, present, and in all the future owe so much to one man.

If so, in what sense does the Cross of Jesus recur? In the centre of the ruins of the Colloseum in Rome where thousands of men, women and children died as martyrs there stands a crude wooden cross. Among all the crosses in the world, the ones in gold and studded with precious stones, the ones in beautifully cut stone or marble, the ones artistically designed in wood, whether in Cathedrals, churches or cemeteries, the old rugged Cross that stood on a hill far away is uniquely meaningful. It brings to mind the clear tones of the hymn, "In the Cross of Christ I glory, towering o'er the wrecks of time". Our Lord shares with us in our "tales of woe", and takes us beyond enabling us to give the "battle cry of victory" as the late Archbishop of Centerbury William Temple put it. Many years ago perched on the top of the eighty-storey building of the First Methodist Church in down town Chicage was an illuminated musical cross. Day and night from the foot of this massive cross pealed out loud and thundering but soothing, inviting, comforting and reproving tones of hymns such as, "When I survey the wondrous Cross", "Rock of ages cleft for me", "The Lord's my Shepherd", and "Fight the good fight". Down below along the patterned streets of the city people wended their way on several pursuits, some worthy and some suspicious. But the cross had a word of comfort, cheer and unerring guidance to those who listened. The Cross of Jesus is a rudder to modern man sailing in troubled waters.

We humans often tend to think of, and many times to speak of, our physical mental and spiritual weaknesses and troubles as "crosses" that we are "called to bear". There are two errors here. The greater of the two is to compare our troubles, however severe, to the suffering that our Lord underwent on His Cross. It is something beyond human comprehension, and much beyond human reason, understanding and experience. It is an experience that brought the kind of dereliction that even the Son who was one with the Father had to undergo. And, how glibly we say the word. Are we "called to bear" our weaknesses and troubles? How much of our burdens is due to our own folly? We bring it all on ourselves, and then seek for causes and sources elsewhere. Even the best of us who somtimes suffer by external impositions of pain of body, mind and soul have little to complain of if we look at Jesus Who though sinless was made sin for our sakes So the Cross recurs not because we suffer here in this sinful world but because Jesus suffers with us and for us. How very true it is that we men and women crucify Him again and again as long as we are degenerate.

The then Bishop A. J. Robinson in his book, "Honest to God", among some of his soul stirring thoughts referred to "Metal images" and "Mental images" that people worship. He says that while we speak deridingly of "metal images" that people worship we harbour in our minds and worship "mental images" and so are equally idolatrous. What about the images of wealth, power, intellect etc., etc., in which we put our trust and keep buried in the recesses of our hearts, and worship? Sometimes these are stumbling blocks that hide our vision of the Cross of Jesus. The spirit of the Cross is that which speaks to us in our varied experience of our daily living with our friends, neighbours, community and church members. It is here that the Cross of Jesus must recur, not in the metal and wooden crosses that stand in Cathedrals, churches or even hang around our necks.

So let us set aside our mental burdens hanging on us heavily and run our spiritual race looking unto Jesus.

*Registered as a Newspaper at the G.P.O., Sri Lanka under No. QB./59/300/26/82.*

Printed for the Jaffna Diocese of the Church of South India at Sri Sanmuganatha Press, Kankesanthurai Road, Jaffna, on Friday, 9th April 1982 and published by Mr. Alvappillai Rajasingam, 330, Navalar Road, Jaffna.